**Tamilnadu Science and Technology Centre**
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24918787
Website: www.tnstc.gov.in
E-mail : tnstc.science@gmail.com

**Dr. S. Soundararajaperumal**, M.Sc.,Ph.D.,
Executive Director, I/C.,

கடித எண்.3335/P1/2022 நாள். 28.11.2022

பெறுநர்:

முதன்மைக் கல்வி அலுவலர்

மாவட்டம்

அன்புடையீர்!

பொருள்: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை -25 புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது 2020-21 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அறிவியல் கண்காட்சி தொடர்பாக

பார்வை: இவ்வலுவலகக் கடித எண். 3335/P1/2022 தேதி 23.11.2022

வணக்கம்.

2021 – 22 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதிற்குத் தங்கள் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி மாணவர்களின் பட்டியல் மின்னஞ்சல் மூலமாகவும், அஞ்சல மூலமாகவும் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

புத்தாக்க அறிவியல் மானக் விருது (INSPIRE MANAK AWARD) 2021-22 ஆண்டுக்கான மாவட்ட அளவிலான கண்காட்சிகள் (District Level Exhibition and Project Competition - DLEPC) நடத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது குறித்து மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறை மற்றும் தேசிய அறிவியல் புத்தாக்க நிறுவனம் ஆகியவை அனுப்பிய சுற்றறிக்கையின்படி மாவட்ட அளவிலான கண்காட்சிகள் இணைய வழியில் டிசம்பர் 5 முதல் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக மாணவர்கள் தங்கள் காட்சிப்பொருள்கள் பற்றிய விவரங்களை பார்வை-1இல் தெரிவித்துள்ளபடி பதிவேற்றம் செய்துவிட வேண்டும்.

மாவட்ட அளவிலான கண்காட்சிகளை இணைய வழியில் நடத்த மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறை மற்றும் தேசிய அறிவியல் புத்தாக்க நிறுவனம் ஆகியன இணைந்து புதிய வழிமுறைகளை அறிவித்துள்ளன. தனிப்பட்ட கணினி அல்லது கைபேசி மென்பொருள் இப்பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ளது. MANAK Competition APP என்ற இதனை Google Play Store மூலம் பதிவிறக்கிக் கொள்ளலாம்.

புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுக்குத் (2021-2022) தேர்ந்தெடுக்கப்பட்ட **1596** மாணவர்கள் மட்டுமே தங்களது அறிவியல் காட்சிப்பொருள் குறித்த விவரங்களை அனுப்ப வேண்டும். அவர்களது விருதுக்கான குறியிட்டு எண் (Award Code Number – எ-டு: 21TN176143) ஒவ்வொரு மாணவருக்குமான User ID ஆகும். அவர்கள் முன்னரே பதிவு செய்துள்ள செல்பேசி எண்ணுக்கு OTP வாயிலாகக் கடவுச்சொல்(Password) அனுப்பப்படும்.

**Tamilnadu Science and Technology Centre**

CHENNAI - 600 025.



தங்கள் மாவட்டத்தில் DLEPCக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்கள மாவட்ட அளவிலான கண்காட்சியில் MANAK COMPETITION App வாயிலாகக் கலந்து கொள்கிறார்களா எனத் தெரிந்துகொள்ள Dashboard தங்களுக்குத் தரப்பட்டுள்ளது. இதற்கான இணையதளம் http://online.nifindia.org/dashboard அறிவிக்கப்பட்டுள்ளது. தங்கள் மாவட்டத்திற்கான USER ID ________________________________

கடவுச்சொல் _______________ ஆகியன மாவட்ட மைய அலுவலரான (Distric Nodal Officer) ஆகிய தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடவுச்சொல் மாற்ம் செய்து கொள்ளலாம். புத்தாக்க அறிவியல் ஆய்வு விருது மாவட்ட மைய அலுவலர்களுக்குத் தரப்பட்டுள்ள இவற்றை வெளிநபர்கள் அறிந்துகொள்ளாதபடி மறைகாப்பாக வைத்துக்கொள்ள பொறுப்பாளரை அறிவுறுத்தக் கேட்டுக்கொள்கிறோம்.

இதனைக்கொண்டு கீழ்க்காணும் விவரங்களும் வசதிகளும் பெறலாம்.

- மாவட்டத்திற்கான மாணவர்களது விவரம;(DLEPC)
- DLEPC-யில் எத்தனை மாணவர்கள் MANAK App பயன்படுத்திப் பதிவு செய்துள்ளனர் என்ற விவரம்
- மாணவர்களுக்குப் கடவுச்சொல் மாற்றித்தரும் வசதி
- மாணவர்களது செல்பேசி எண் மாற்றித்தரும் வசதி

மாணவர்கள் பதிவு செய்துள்ள செல்பேசிக்குப் பதிலாக வேறொரு செல்பேசியைப் பயன்படுத்தினால் அவர்களுக்குரிய புதிய கடவுச்சொல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலம் மூலமாகக் கொடுக்கப்பட வேண்டும் புதிய கடவுச்சொல் அல்லது புதிய செல்பேசி எண் மாற்றம் தேவைப்படும் மாணவர்கள் தங்கள் அலுவலகத்தைக் குறிப்பிட்ட தேதிகளில் தொடர்பு கொள்ளத் தேவையான தொலைபேசி எண் அல்லது செல்பேசி எண் அந்த மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

இம்முறையில் தமிழகத்திற்கான பதிவேற்றம் செய்யும் வாய்ப்பு 2022, டிசம்பர் 4 வரை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது அதன்பின் இணையம் பதிவுகளை ஏற்காது.

பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு இத் தகவலை அறிவித்து குறிப்பிட்ட தேதிக்குள் அம் மாணவர்கள் தங்களுடைய செயல் முறைகளை பதிவு செய்து அனுப்பி வைக்க அறிவுறுத்த வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

எ.சௌ.பெருமாள்
28.11.22

செயல் இயக்குநர்(பொ)